முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம்,வடமாகாணம்
**Provincial Department of Education. Northern Province**

நிலையறிபரீட்சை-2021
தரம் **10**

| 45 | T | I,II |
|---|---|---|

பரதநாட்டியம் **I, II**
**Dance (Baratham) I, II**

மூன்றுமணித்தியாலம்
**Three Hours**

**கவனிக்க:**

- ☐ எல்லாவினாக்களுக்கும் விடைதருக.
- ☐ 1-40 வரையுள்ளவினாக்கள் ஒவ்வொன்றிலும் சரியானஅல்லதுமிகப்பொருத்தமானவிடையைத் தெரிவுசெய்க.
- ☐ உமக்குவழங்கப்பட்டுள்ளவிடைத்தாளில் ஒவ்வொருவினாவுக்குமுரியவட்டங்களில் உமதுவிடையின் இலக்கத்தைஒத்தவட்டத்தினுள்ளேபுள்ளடியை இடுக.

**1.** கரையோர பிரதேசத்தை மையமாகக் கொண்ட தொழில்சார் நடனம்
(1) அரிவிவெட்டு நடனம் (2) குறவன் குறத்திநடனம்
(3) மீனவநடனம் (4) தேயிலை கொழுந்து நடனம்

**2.** மகுடஅடவு என அழைக்கப்படும் அடவு
(1) தட்டடவு (2) கிடதகதரிகிடதொம் அடவு
(3) தாதெய் தெய்தஅடவு (4) குத்தடவு

**3.** நீர் கற்ற அலாரிப்பு அமைந்த இராகம்
(1) நாட்டை (2) கல்யாணி (3) சாவேரி (4) ஆரபி

**4.** சங்கு ஊதுவதைக் குறிக்கும் சமஸ்கிருத சொல்
(1) சமூகாகமனே (2) துந்ததர்சனே (3) சங்கபூரணே (4)அங்கானாம்மோடனே

**5.** தித்தெய்ந்ததாதெய் அடவு ஓர்
(1) பாய்ச்சல் அடவு (2) பரவல் அடவு (3) ஊஞ்சல் அடவு(4) சறுக்கல் அடவு

**6.** ஸ்வரமாலை, ஸ்வரபல்லவி என அழைக்கப்படும் பரதநாட்டிய உருப்படி
(1) வர்ணம் (2) அலாரிப்பு (3) தில்லலானா (4) ஜதிஸ்வரம்

**7.** கூத்தாட வந்த இளைஞர்,முதியவர்க்கு அவரின் குரல்,உடல் என்பவற்றிற்குஏற்ப பாத்திரங்கள் அண்ணாவியாரால் வழங்கப்படுவது
(1) கிழமைக்கூத்து (2) சட்டம் கொடுத்தல் (3) அரங்கேற்றம் (4) ஊருக்குசெல்லல்

**8.** விருத்தங்கள் இழுத்துப்பாடப்படும் நாட்டுக்கூத்து
(1) வடமோடி (2) முல்லைமோடி (3) தென்மோடி (4) வாசப்புக்கூத்து

**9.** கருவறைக்குமேல் உயரமான விமானம் மாறுபாடான அமைப்பாக இருந்ததால் யுனெஸ்கோவால் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்ட ஆலயம்
(1) மதுரைமீனாட்சிஅம்மன் ஆலயம் (2) திருப்பதி
(2) சிதம்பரம் (4) தஞ்சைபெருங்கோயில்



kalvi.lk

**10.** பந்தனை நல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு எழும்பூர் ஜகந்நாதசபா வழங்கிய பட்டம்
(1) நாட்டியமானி (2) நாட்டியகலாநிதி (3) கலைமாமணி (4) நாட்டியச்செம்மல்

**11.** தேசிங்குராசன் கதை,நல்லதங்காள் கதைபோன்ற நிகழ்ச்சிகளில் வாசிக்கும் இசைக்கருவி
(1) கிற்றார் (2) உடுக்கு (3) பறை (4) வயலின்

**12.** தவில் வாசிக்க பயன்படும் கழி செய்யப்படும் மரம்
(1) தேக்கு (2) முதிரை (3) திருவாத்தி (4) கருங்காலி

**13.** மகாபலிச் சக்கரவர்த்தியின் கர்வத்தைஅடக்கபகவான் எடுத்த அவதாரம்
(1) வாமணஅவதாரம் (2) கல்கிஅவதாரம் (3) ஸ்ரீராமஅவதாரம் (4) நரசிம்மஅவதாரம்

**14.** அரங்கப்பொருட்களை பெருமளவில் பயன்படுத்தும் தர்மி
(1) நாட்டியதர்மி (2) பரததர்மி (3) லோகதர்மி (4) நாடகதர்மி

**15.** ஒருநர்த்தகியின் பகிப்பிராணன்களுள் அடங்குவது
(1) வீணை (2) உடுக்கு (3) கிற்றார் (4) தவில்

**16.** பச்சைமணி,பவளமணி,செருகியகொண்டை என்பவற்றை ஆஹார்ய அபிநயமாக கொண்ட தொழில்சார் நடனம்
(1) அரிவிவெட்டுநடனம் (2) தேயிலைகொழுந்துநடனம்
(3) குறவன் குறத்திநடனம் (4) மீனவநடனம்

**17.** அரக்கர்களை அபிநயிக்க பயன்படும் முத்திரை
(1) கட்வா (2) சகடம் (3) சங்கு (4) சக்கரம்

**18.** கண்டிய நடனத்திற்கு பயன்படுத்தும் இசைக்கருவி
(1) மிருதங்கம் (2) தபேலா (3) உடரட்டபெர (4) வயலின்

**19.** வேணுகோபாலனைக் குறிக்க பிரயோகிக்கும் முத்திரைகள்
(1) கடகாமுகம்,கடகாமுகம் (2) பதாகம்,பதாகம்
(3) கபித்தம்,கபித்தம் (4) மிருகசீர்ஷம்,மிருகசீர்ஷம்

**20.** பூமியில் விழுந்த ஆபரணத்தை எடுக்கும் போது பயன்படுத்தும் சிரோபேதம்
(1) ஆலோலிதம் (2) சமம் (3) உத்வாகிதம் (4) அதோமுகம்

**21.** வாய் வார்த்தைகளால் வெளிப்படுத்தும் அபிநயம்
(1) வாச்சிகஅபிநயம் (2) ஆங்கிகஅபிநயம்
(3) சாத்விகஅபிநயம் (4) ஆஹார்யஅபிநயம்

**22.** பின்வருவனவற்றில் நரம்புவாத்தியமாக அமைவது
(1) புல்லாங்குழல் (2) நாதஸ்வரம் (3) வயலின் (4) தவில்

**23.** ஐந்து வகை நடைகளுள் இறுதியாக இடம்பெறும் நடை
(1) மிஸ்ரம் (2) திஸ்ரம் (3) சங்கீர்ணம் (4) சதுஸ்ரம்

**24.** 35 தாளங்களில் அதிகூடிய அட்சரம் உடைய தாளம்
(1) மிஸ்ரஜாதிதுருவதாளம் (2) சங்கீர்ணஜாதிதுருவதாளம்
(3) சங்கீர்ணஜாதிஅடதாளம் (4) மிஸ்ரஜாதிஅடதாளம்

**25.** தெய் திதிதெய் என்பதன் மிருதங்க சொற்கட்டு
(1) ததிங்கிணதொம் (2) தகததிங்கிணதொம்
(3) கிணதொம் (4) தகதிகுததிங்கிணதொம்



kalvi.lk

**26.** இராஜராஜனின் விருதுப்பெயர்
(1) கூன்பாண்டியன் (2) பாண்டிகுலாசினி
(3) வீணாதரன் (4) சங்கீர்ணஜாதி

**27.** தெய்,; தெய்,; தாம்;;; இதில் இடம்பெறும் மாத்திரைகள்
(1) 15 (2) 18 (3) 10 (4) 16

**28.** அழகியபூக்களில் வண்டுகள் தேன்குடித்து மயங்கின. இதில் வண்டுகளை அபிநயிக்கப் பயன்படும் முத்திரை
(1) ஹம்சபக்ஷம் (2) பிரமரம் (3) கடகாமுகம் (4) ஹம்ஸாஸ்யம்

**29.** அலாரிப்பில் இடம்பெறும் கிரீவாபேதம்
(1) திரச்சீனா (2) பரிவர்த்திதா (3) பிரகம்பிதா (4) சுந்தரி

**30.** சுற்றிவரும் அசைவுகளை குறிக்கும் பாதபேதம்
(1) பிரமரி (2) மண்டலம் (3) உத்பிளவனம் (4) பாதசாரிகா

**31.** பலஅடவுகளின் சேர்க்கை
(1) கோர்வை (2) சொற்கட்டு (3) விநியோகம் (4) முத்திரை

**32.** நாட்டிய உருப்படி வரிசையில் முதலாவதாக இடம்பெறும் நிருத்தஉருப்படி
(1) சப்தம் (2) அலாரிப்பு (3) ஜாவளி (4) வர்ணம்

**33.** விக்னானாம் நாஷனம் கர்த்தும் என ஆரம்பிக்கும் ஸ்லோகம்
(1) புஸ்பாஞ்சலி (2) தியானஸ்லோகம் (3) நாட்டியக்கிரமம் (4) அரங்கதேவதாஸ்துதி

**34.** மாரியம்மனை வேண்டி ஆடும் கிராமிய நடனம்
(1) காவடி (2) கரகம் (3) கும்மி (4) கோலாட்டம்

**35.** பரதநாட்டியத்திற்குபயன்படுத்தும் சம்பிரதாயஉடை………….என்றழைக்கப்படும்.
(1) பஞ்சகச்சம் (2) கூடைபோன்ற ஆடை
(3) சர்வாணி (4) வேட்டிசட்டை

**36.** பட்டாபிஷேக என்பதன் கருத்து………..ஆகும்.
(1) மரக்கிளை (2) முடிசூட்டுதல் (3) மலைஉச்சி (4) கல்யாணம்

**37.** நாட்டுக்கூத்தினை நடாத்தி வைப்பவர் …………எனப்படுவார்.
(1) அரசர் (2) சபாநாயகர் (3) நட்டுவனார் (4) அண்ணாவியார்

**38.** அடதாளத்தின் அங்க அடையாளங்கள் ………….
(1) I I O O (2) I O I (3) I O I I (4) O I

**39.** ஜவக் என்பதன் கருத்து…………….ஆகும்.
(1) உறுதி (2) வடிவமைப்பு (3) வேகம் (4) ஆர்வம்

**40.** …………….மங்கல வாத்தியம் எனப்படுகிறது.
(1) மிருதங்கம் (2) வயலின் (3) தவில் (4) உடுக்கு

**( 40×1=40 புள்ளிகள் )**



kalvi.lk

# (045) பரதநாட்டியம் I,II

❖ **முதலாம்** வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடைதருக.

**1.** சுருக்கமானவிடைதருக.

(i) கையில் வளைந்த கத்தி, புதிய தானியத்தை வரவேற்கும் முகமாகவும் அமைந்திருக்கும் தொழில்சார் நடனம் யாது?

(ii) தெய் தெய் தாம் அடவு அமைந்ததாளம் எது?

(iii) பரதநாட்டிய கச்சேரி உருப்படியில் இரண்டாவதாக அமைந்த உருப்படி எது?

(iv) பறை மேளக்கூத்து ஆடும் பிரதேசம் எது?

(v) போர் சார்ந்தகதையை உடையநாட்டுக்கூத்து எது?

(vi) ஆடல் மகளிருக்கு பக்கபலமாக துணையாக இருப்பது எது?

(vii) திருமால் மீன் வடிவமாக எடுத்த அவதாரம் எது?

(viii)நாதஸ்வரத்திற்கு துணைக்கருவியாக பயன்படும் இசைக்கருவி எது?

(ix) மகுடஅடவுகள் இரண்டு தருக.

(x) தாளத்திலிருந்து எழும் இருவகையான ஓசைகள் எவை?

**( 12புள்ளிகள் )**

**2.** (i) கிடதகதரிகிடதொம் அடவுஅமைந்த தாளம் எது?

(ii) கிடதகதரிகிடதொம் அடவில் பாவிக்கும் முத்திரைகள் எவை?

(iii) கிடதகதரிகிடதொம் அடவின் சொற்கட்டினை திரிகாலத்தில் தாள,அங்க குறியீட்டுடன் எழுதுக.

**( 1+2+9 = 12 புள்ளிகள் )**

**3.** பின்வரும் ஹஸ்தங்களின் விநியோகத்தை கருத்துடன் எழுதுக.

(i)அவகித்தம் (ii)பேருண்டம் (iii)பாசம்

**( 4+4+4 = 12 புள்ளிகள் )**

**4.** வடமோடி,தென்மோடி,நாட்டுக்கூத்துக்கிடையிலான வேறுபாடுகளை ஆடல்,பாடல், அவைக்காற்றுமுறை,உடை,ஒப்பனை,கரு,கதை என்பவற்றின் அடிப்படையில் விளக்குக.

**( 12புள்ளிகள் )**

**5.** சிறுகுறிப்புஎழுதுக.

(i) ஜதிஸ்வரம் (ii)உடுக்கு (iii)நாட்டியதர்மி

**( 4+4+4 = 12 புள்ளிகள் )**

**6.** நாட்டியகலாநிதி பந்தனை நல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் வாழ்க்கை வரலாறு,கலைப்பணிபற்றிக் குறிப்பிடுக.

**( 12புள்ளிகள் )**

**7.** நீர் விரும்பிய **இரண்டு** தொழில்சார் நடனங்கள் பற்றி பின்வரும் விடயங்களில் ஆராய்க.

(i) அறிமுகம் (பிரதேசம்)

(ii) பயன்படும் இசைக்கருவி

(iii) ஆடல் அமைப்பு

(iv) ஆடை அணிகலன்கள்

**( 1+1+2+2 = 6 புள்ளிகள் )**

**( 6+6 = 12 புள்ளிகள் )**



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**